DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 106/2022
Miscellaneous :
Sessions : PW .1
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | |
| Husband Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15/**05**/**2023**

**குறுக்கு விசாரணை**

எனக்கும் எதிரிக்கும் வியாபார பரிவர்த்தனை இருந்தது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எனக்கும் எதிரிக்குமிடையே வியாபார பரிவர்த்தனை இல்லை என்பதால் தான் நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் வட்டிக்கு கொடுக்கும் தொழிலை உரிமம் பெற்று செய்கிறேனா என்றால் இல்லை. பழகியவருக்கு மட்டும் கடன் கொடுப்பேன்.

2. ரூ.15 லட்சம் பெரிய தொகை என்பதால் அண்டிபாண்டு மற்றும் சாட்சிகள் முன்னிலையில் கொடுப்பது சமூக வழக்கம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பழகிய நண்பர் என்பதால் பணம் கொடுத்தேன். ரூ.15 லட்சம் கடன் கொடுப்பதற்கு எனக்கு எந்த வகையில் வருமானம் என்றால் நான் வியாபாரம் செய்வதன் மூலம் கிடைக்கும். நான் என்ன வகையான வியாபாரம் செய்கிறேன் என்பதை காட்டக்கூடிய ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

3. ரூ.15 லட்சம் ரூபாயை எதிரிக்கு நான் கொடுக்கவில்லை என்றாலும் ரூ.15 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு போதிய வசதி வாய்ப்பு இல்லை என்றாலும் சரியல்ல. இந்திய வருமான வரிசட்டம் 1961 பிரிவு 269 SS ன்கீழ் ரூ.20 ஆயிரத்திற்கு மேல் ரொக்க பண பரிவர்த்தனை தடைசெய்யப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

4. எதிரிக்கு ரூ.15 லட்சம் கடன் கொடுத்த விவரத்தை வருமான வரி கணக்கில் நான் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. உண்மையில் எதிரிக்கு ரூ.15 லட்சம் கடன் கொடுத்திருந்தால் நான் தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் அந்த விவரத்தை

சொல்லியிருப்பேன் என்றாலும் நான் கடன் கொடுக்காததால் தான் வருமான வரி கணக்கில் விவரத்தை சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலையில் எதிரியின் கையொப்பம் ஒரு மையினாலும் மற்ற விவரங்கள் வேறு மையினாலும் நிரப்பப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. எதிரி தான் நிரப்பி கொடுத்தார். வழக்கு காசோலை கையொப்பம் மட்டும் போடப்பட்டு தேதி தொகை விவரம் நிரப்பப்படாமல் எதிரியிடமிருந்து பொறுப்பிற்காக வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி வியாபாரத்திற்காக பல இடங்களில் லோன் வாங்குவதற்காக நிதி நிறுவனங்களை அணுகி இருந்தார் என்றும் அந்த வகையில் நான் நிதி நிறுவனத்திடமிருந்து லோன் வாங்கி தருகிறேன் என்று கூறியதன் அடிப்படையில் செக்யூரிட்டி பர்பஸீக்காக என்னிடம் கொடுத்திருந்த கையெழுத்து மட்டும் செய்யப்பட்ட காசோலையை எதிரி மீது தவறாக இந்த வழக்கில் பயன்படுத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

5. எதிரியிடம் பலமுறை பணம் கேட்டு நடவடிக்கை எடுத்ததாக வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருக்கிறேன். எந்தவிதமான நடவடிக்கை எடுத்தேன் என்பதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் எதிரியிடம் நேரில் கேட்டேன். எதிரிக்கு நான் கடன் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக பலமுறை கடனை கேட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கு எதிரிக்கு எதிராக போடப்பட்ட பொய்யான வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் எதிரியை கட்டுப்படுத்தாது என்றாலும் வழக்கிற்கு பொருத்தம் இல்லாத ஆவணங்கள் என்றாலும் சரியல்ல. வழக்கு எதிரியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.